நியமனப் படிவங்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை இரண்டு பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதும் இருப்பின், வாக்குப் பதிவு நடைபெறும் நாளும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

3. மாற்றுத் தலைவர் பட்டியல்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 6-வது விதியின் கீழ் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட மேலவையின் 51-வது கூட்டத் தொடருக்கு, கீழ்க்காணும் உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறுமாறு மேலவைத் தலைவர் அவர்கள் நியமித்துள்ளார் என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு. மு. இராமநாதன்;
2. திரு. எல். பலராமன்;
3. திரு. எஸ். நாராயணசாமி;
4. திரு. பி. ஆர். தாமஸ்.

4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1975).

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்

என்று முன்மொழிகிறேன்.

@ 126 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீரமானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை ஏதும் இல்லை.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1975) திருப்பியனுப்பப் பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1975) திருப்பியனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 4-40)

(2) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு வழக்கமான குற்றவாளிகளைக் கட்டுப் படுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1975.)

மாண்புமிகு திரு. செ. மாதவன் : துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு வழக்கமான குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1975.) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 127-133 ஆம் பக்கங்களில் II ஆக அச்சிடப்பட்டுள்ளது.